பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

தென்னைப் பயிர்ச்செய்கை சபை

பதவி வெற்றிடங்கள்

தென்னைப் பயிர்ச்செய்கை சபை கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்களை கோருகிறது.

பதவி: உதவி முகாமையாளர் (நிதி) தரம் II
சேவை இடம்: தலைமை அலுவலகம் - பதவி - 01

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவாரி தகைமை-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ வர்த்தகத்தில் விசேட பட்டதாரியாக இருத்தல் மற்றும் முகாமைத்துவ (Managerial) தரத்தில் 03 ஆண்டுகள் குறித்த துறையில் அனுபவம்.

சம்பள பிரிவு: MM 1-3

சம்பள அளவு: ரூபா 96,650/-(2,480x10) (3,450x15) 173,200/-

01/2025 சுற்றுநிருபத்திற்கு அமைய கொடுப்பனவு மேற்கொள்ளும் முறை

2026.01.01 ஆம் திகதிக்கு	2027.01.01 ஆம் திகதிக்கு
ரூபா 85,896/-	ரூபா 96,650/-

வயது: 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

பதவி: உள்ளக கணக்காளர் தரம் II
சேவை இடம்: தலைமை அலுவலகம் - பதவி - 01

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவாரி தகைமை-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பட்டம்/ வர்த்தக முகாமைத்துவ பட்டம்/ அரச நிர்வாகப் பட்டம்/ முகாமைத்துவ பட்டம்/ வர்த்தகத் துறை பட்டம் அல்லது நிதி நிர்வாகத்தில் சிறப்புடன் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான பட்டம்/ வர்த்தகத்துறை பட்டம்/ அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை கணக்காளர் நிறுவனம் ஒன்றில் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் (CIMA/ACCA/ ICASL etc.)/ கணக்கியல் தொடர்பில் உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர்/ குறித்த தொழில்முறை தகைமைகளை பூர்த்தி செய்த பின் குறித்த விடயப் பரப்பில் மூன்று (03) ஆண்டுகள் சேவை அனுபவம்.

சம்பள பிரிவு: MM 1-1

சம்பள அளவு: ரூபா 91,690/-(2,480x10) (3,450x15) 168,240/-

01/2025 சுற்றுநிருபத்திற்கு அமைய கொடுப்பனவு மேற்கொள்ளும் முறை

2026.01.01 ஆம் திகதிக்கு	2027.01.01 ஆம் திகதிக்கு
ரூபா 81,710/-	ரூபா 91,690/-

வயது: 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

(மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவானது ரூபா 17,800/- உட்பட பதவிக்கு தொடர்புடைய அரசின் ஏனைய கெடுப்பனவுகள் உரித்தாகும்.)

வேறு நிபந்தனைகள்:-

ஆட்சேர்ப்பு முறை – நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் எழுத்து போட்டிப் பரீட்சை ஒன்று மற்றும்/ அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபை ஒன்றின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும்

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

III. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள்:

- அதன்படி 2026.11.13 ஆம் திகதிக்கு குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் கீழுள்ள இணையதளத்தில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய அல்லது தாமாக தயாரித்த பொருத்தமான படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். அதேபோன்று கல்வித் தகைமை, தொழில் தகைமை மற்றும் அனுபவம் தொடர்பில் விபரங்களை உறுதி செய்ய முடியுமான சன்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபை சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒரு பதவிக்கு ஒன்று வீதமாக விண்ணப்பங்களை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- அதேபோன்று இந்த நேர்முகப் பரீட்சை தொடர்பில் நீங்கள் ஏதேனும் செல்வாக்குச் செலுத்தினால் அது பதவிக்கு இணைப்பதற்கு தகைமை இழப்பாக கருதப்படும் என்பதை மேலும் அறியத்தரப்படுகிறது.
- அனைத்து விண்ணப்பங்களும் 2026.11.13 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கிடைக்குமாறு "தலைவர், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடாத ஏதேனும் விடயம் இருந்தால். அது தொடர்பில் குறித்த ஆட்சேர்ப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இந்த பதவி தொடர்பில் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் அதற்காக தகைமை இழப்பாக கருதப்படும்.

தலைவர்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை

மேலுள்ள பதவிக்காக குறித்த விண்ணப்பங்களை கீழுள்ள இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும்படி அறியத்தரப்படுகிறது. அவ்வாறு தரவிறக்கம் செய்வதில் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டால் தாமாக தயாரித்த படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்பும்படி அறியத்தரப்படுகிறது.

https://coconutsrilanka.lk/